# 5

# "என்னை நினைவுகூரும்படி"

*கிறிஸ்துவின் மரணம், அடக்கம், மற்றும் உயிர்த்தெழுதல் ஆகியவை சுவிசேஷச் செய்தியின் மையக்கருத்தை வடிவமைக்கின்றன என்றால் (1 கொரிந்தியர் 15:3, 4), கர்த்தருடைய இராப்போஜனம் நமது ஆராதனையில் மையமான இடத்தைக் கொண்டிருக்க வேண்டும். கர்த்தருடைய பந்தியில்தான் கிறிஸ்தவர்கள் ஒருவருக்கொருவரும் தேவனுடனும் சிலுவையின் வெற்றியில் பங்கேற்கும்படி மீண்டும் மீண்டும் அழைக்கப்படுகின்றனர். கிறிஸ்தவ ஆராதனையில் கர்த்தருடைய இராப்போஜனத்தின் மைய இடமானது பழைய ஏற்பாட்டு நடை முறைகளில் அதன் ஆழமான வேர்களினால் சுட்டிக்காண்பிக்கப்படுகிறது.*

*இயேசு தாம் பிரிந்து செல்லுதலுக்கு மூன்று ஆண்டுகள் காலமாகத் தமது சீஷர்களை ஆயத்தப்படுத்திக் கொண்டிருந்தார். அவர் பிரதான ஆசாரியர்கள் மற்றும் வேதபாரகர்கள் கைகளில் ஒப்புக்கொடுக்கப்பட்டு, சிலுவையில் அறையப்பட்டு, மூன்றாம் நாளில் மீண்டும் உயிர்த்தெழ இருப்பதாக அவர்களிடம் குறைந்தது மூன்று முறைகள் கூறியிருந்தார் (மத்தேயு 16:21; 17:22, 23; 20:18, 19). கடைசியாக அவர்களுடன் அவர் உணவு உண்பார். அந்த நிகழ்ச்சியானது எபிரெயர்கள் தங்கள் முற்பிதாக்கள், எகிப்திய அடிமைத்தளையில் இருந்து விடுவிக்கப்பட்ட நாளில் இருந்து கடைப்பிடித்த, வருடாந்தர பஸ்கா பண்டிகையாக இருந்தது. அவர்கள் (எபிரெயர்கள்) விடுவிக்கப்படுவதற்கு முந்திய இரவில், ஒரு ஆட்டுக்குட்டியைக் கொன்று அதன் இரத்தத்தை அவர்களின் கதவு நிலைகளில் தடவ வேண்டும் என்று அவர்களிடத்தில் தேவன் கூறியிருந்தார். இது விடுவிக்கப்படுதலின் இரத்தமாக இருந்தது. எகிப்தில் பிறந்த தலைச்சன் பிள்ளைகளின் உயிரை எடுக்கும்படிக்கு - இது பார்வோன் மற்றும் அவனது மக்கள்மீது உண்டான கடைசி வாதையாக இருந்தது - தேவன் நாட்டினூடே கடந்து செல்லுகையில் தங்கள் வீடுகளின் கதவு நிலைகளில் இரத்தத்தைத் தடவியிருந்தவர்கள் பிழைத்திருக்கும்படி விடப்பட்டனர். அதன்பின்பு அவர்கள் எகிப்திய அடிமைத்தளையில் இருந்து தாங்கள் விடுவிக்கப்பட்டதை நினைவுகூரும்படி ஒவ்வொருஆண்டும், அவர்கள் பஸ்கா பண்டிகையைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று தேவன் கட்டளையிட்டு இருந்தார் (யாத்திராகமம் 12:1-13:10).*

*பஸ்கா பண்டிகை விருந்தின் உணவுப் பட்டியலில், முழுவதுமாகப் பொறித்து உண்ணப்பட வேண்டிய பலிசெலுத்தப்பட்ட ஆட்டுக்குட்டி, புளிப்பில்லாத அப்பம், கசப்பான கீரைகள், மற்றும் திராட்ச ரசம் ஆகியவை அடங்கியிருந்தன. புளிப்பில்லாத அப்பம் என்பது அவர்கள் தங்கள் அப்பங்களுக்கு மாவைப் புளிக்கச் செய்ய நேரம் இல்லாமல்,*

எகிப்தில் இருந்து அவசரமாகப் புறப்பட வேண்டியிருந்ததை அவர்களுக்கு நினைவூட்டுவதாக இருந்தது. கசப்பான கீரைகள் அவர்களின் அடிமைத் தனத்தின் கசப்புத் தன்மையை அவர்களுக்கு ஞாபகப்படுத்தின. இந்த நினைவுகூரும் விருந்தில் இயேசு தமது சீஷர்களுடன் பங்கேற்கையில், அவர் பஸ்கா பண்டிகையின் இரு பொருட்களை எடுத்து அவற்றிற்குப் புதிய அர்த்தத்தைக் கொடுத்தார், அது சற்றுப்பிந்திய நேரம் வரையில் சீஷர்களால் புரிந்துகொள்ளப்படாத அர்த்தமாக இருந்தது.

> *அவர்கள் போஜனம்பண்ணுகையில், இயேசு அப்பத்தை எடுத்து, ஆசீர்வதித்து, அதைப் பிட்டு, சீஷர்களுக்குக் கொடுத்து: "நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது என்னுடைய சரீரமாயிருக்கிறது என்றார்." பின்பு, அவர் பாத்திரத்தையும் எடுத்து, ஸ்தோத்திரம் பண்ணி, அவர்களுக்குக் கொடுத்து: "நீங்கள் எல்லாரும் இதிலே பானம் பண்ணுங்கள்; இது பாவமன்னிப்புண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமா யிருக்கிறது என்றார்" (மத்தேயு 26:26-28).*

இயேசு மேசியாத்துவ விடுதலையின் பலி ஆட்டுக்குட்டியானார். அவர் நம்மைப் பாவம் மற்றும் மரணம் ஆகியவற்றின் அடிமைத்தளையில் இருந்து விடுவிப்பதற்காகத் தமது சொந்த உடலையும் இரத்தத்தையும் கொடுத்தார். அவர் தேர்ந்துகொண்ட எளிய பொருட்கள் அவரது பலியைத் தக்க வகையில் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன. யூதர்கள் எகிப்திய அடிமைத் தளையிலிருந்து தங்கள் முற்பிதாக்கள் விடுவிக்கப்பட்டதை நினைவுகூருவ தற்குப் பஸ்காவைத் தொடர்ந்து கடைப்பிடித்தனர். கிறிஸ்தவர்கள் பாவத்திலிருந்து தாங்கள் விடுவிக்கப்பட்டதை நினைவுகூருவதற்குக் கர்த்தருடைய பந்தியைச் சுற்றிலும் தொடர்ந்து கூடிவருகின்றனர்.

## ஒரு அரசருக்கான விருந்து

இயேசுவின் மரணம், அவரது சீஷர்கள் ஒன்றுகூடி விருந்துண்ணு தலுக்கு முடிவாக இராமல், அவரது - அந்த அரசரது - விருந்து மேஜையில் அவர்கள் விருந்துண்ணுதலின் தொடக்கமாக இருந்தது. அவர் அடுத்ததாகக் கூறியதைப் புரிந்துகொள்ள அவர்கள் சிரமப்பட்டிருக்கலாம்: "இதுமுதல் இந்தத் திராட்சப்பழரசத்தை நவமானதாய் உங்களோடேகூட என் பிதாவின் ராஜ்யத்திலே நான் பானம்பண்ணும் நாள்வரைக்கும் இதைப் பானம் பண்ணுவதில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன்" (மத்தேயு 26:29), அல்லது, லூக்கா கூறியபடி, "தேவனுடைய ராஜ்யம் வருமளவும்" (லூக்கா 22:18அ). அவர்களுடன் அவர் மீண்டும் பஸ்காவை ஒருக்காலும் புசிக்க மாட்டார். இருப்பினும், அவர் ராஜ்யம் வந்தபோது அவர்களுடன் ஒரு புதிய விருந்தில் உண்டு பானம் பண்ணுவார். அவர்களின் வாழ்நாள் காலத்திலேயே ராஜ்யம் வரும் என்று அவர்களுக்கு அவர் வாக்குத்தத்தம் செய்திருந்தார் (மாற்கு 9:1). அவர் தமது சபை என்றும் அழைத்திருந்த ராஜ்யத்தின் கதவுகளைத் திறக்கும் சிலாக்கியத்தைப் பேதுருவுக்கு வாக்குத்தத்தம் செய்திருந்தார் (மத்தேயு 16:18, 19). இயேசுவின்

உயிர்த்தெழுதலுக்குப் பின்பு வந்த முதல் பெந்தெகொஸ்தே நாளன்று ராஜ்யத்தின் திறவுகோல்களைப் பேதுரு பயன்படுத்தினார். அவர் முதல் சுவிசேஷப் பிரசங்கத்தைப் பிரசங்கித்தார், அது கிறிஸ்தவத்தில் முதன் முதலாக மனமாற்றம் பெற்றவர்களை விளைவித்தது (நடபடிகள் 2:14-40). மனமாறிய இவர்கள் யாவரும் பாவமன்னிப்புக்காக இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே முழுக்காட்டப்பட்டு (நடபடிகள் 2:38) சபைக்குள் சேர்த்துக்கொள்ளப்பட்டனர் (நடபடிகள் 2:47). சபை என்பது பூமியில் தேவனுடைய ராஜ்யமாக உள்ளது. இயேசுவின் நாமத்தில் இருவர் அல்லது மூவர் எங்கெல்லாம் கூடியுள்ளனரோ, அங்கெல்லாம் அவர்களுடன் தாம் இருப்பதாகவும் இயேசு வாக்குத்தத்தம் செய்திருந்தார் (மத்தேயு 18:20). இயேசு, "நவமானதாய் உங்களோடேகூட என் பிதாவின் ராஜ்யத்திலே, நான் பானம்பண்ணும் நாள்வரைக்கும்" என்று கூறிய போது, அவர் தமது உயிர்த்தெழுதலுக்குப் பின்பு கர்த்தருடைய பந்தியில் பங்கேற்க அவர்கள் கூடிவருகையில் அவர்கள் மத்தியில் தாம் இருப்பதாக வாக்குத்தத்தம் செய்திருந்தார். அவர்களே அவரது ராஜ்யமாகிய, பிதாவின் ராஜ்யத்தில் இருப்பார்கள்.

கர்த்தருடைய இராப்போஜனம் என்பது மேசியாத்துவ அரசருக்கும் குடிமக்களுக்கும் பொருத்தமான விருந்தாக உள்ளது. இந்த விருந்து அவர்களை ஒருவர் மற்றவருடனும் அரசருடனும் ஒன்றாகப் பிணைப்பதாக உள்ளது. கர்த்தருடைய மேஜையைச் சுற்றிலும் அமர்ந்து உண்ணும் இந்த விருந்து, "கிறிஸ்துவினுடைய இரத்தத்தின் ஐக்கியமாக" மற்றும் "கிறிஸ்துவினுடைய சரீரத்தின் ஐக்கியமாக" உள்ளது (1 கொரிந்தியர் 10:16). நாம், "அந்த ஒரே அப்பத்தில் நாமெல்லாரும் பங்குபெறுகிறபடியால், அநேகரான நாம் ஒரே அப்பமும் ஒரே சரீரமுமாயிருக்கிறோம்" என்று வாசிக்கிறோம் (1 கொரிந்தியர் 10:17). அரசரின் பலியான இரத்தத்தினால் மீட்கப்பட்டவர்கள் மாத்திரமே அவரது விருந்து மற்றும் பிரசன்னத்தில் இருக்கத் தகுதி பெறுகின்றனர். அவர்கள் - பாவத்திலிருந்து தங்களுக்கு வெற்றியைக் கொணர்ந்த நிகழ்ச்சியில் அவருடனும் ஒருவர் மற்றவருடனும் பங்கேற்றல் என்ற - ஒரே ஒரு நோக்கத்திற்காக இந்த விருந்திற்கு அழைக்கப்படுகின்றனர்.

## கர்த்தருடைய நாளின் இராப்போஜனம்

கிறிஸ்தவர்கள் தங்களது ஆதித்தொடக்கத்திலிருந்தே, வாரத்தின் முதல்நாளில் அப்பம் பிட்குதலுக்குக் கூடிவந்தனர் (நடபடிகள் 2:42; 20:7). "அப்பம் பிட்குதல்" என்பது கர்த்தருடைய இராப்போஜனத்தில் பங்கேற்கும் நடைமுறைக்கு அடிக்கடி பயன்படுத்தப்பட்ட சொற்றொடராக இருந்தது. 1 கொரிந்தியர் 10:16ல் பவுல், "நாம் பிட்கிற இந்த அப்பம்" என்பதைப் பற்றிப் பேசுகையில், அவர் கர்த்தருடைய இராப்போஜனத்தின் பாகத்தைக் குறிப்பிட்டார். கொரிந்து சபையில் கர்த்தருடைய இராப்போஜனம் பண்ணுதலில் இருந்த தவறான பயன்பாடுகளைத் திருத்தப் பவுல் நாடியபோது, அவர்கள் கர்த்தருடைய இராப்போஜனத்தைப் புசிக்கவே ஒன்றாகக் கூட வேண்டும் என்பதைத் தெளிவாக்கினார் (1 கொரிந்தியர் 11:20). அவர்கள் அதைச் செய்து

கொண்டிருக்கவில்லை என்பது தெளிவு, ஆனால் அதைத்தான் அவர்கள் செய்து கொண்டிருந்திருக்க வேண்டும். "தொடக்ககால சபையின் வரலாற்றின் கருத்து ஒற்றுமை இந்த நடைமுறையை உறுதிப்படுத்துகிறது. இந்தப் பரிசுத்த விருந்தைக் கடைப்பிடிக்க, வாரத்தின் முதல்நாளில் கிறிஸ்தவர்கள் ஒன்றுகூடிவந்த நடைமுறைக்கு அறைகூவல் விடுப்பதற்கு, வேதவசனங்களிலோ அல்லது தொடக்ககால சபை வரலாற்றிலோ சாட்சியம் எதுவும் நிலவுவதில்லை."[1]

டேவிட் ரோப்பர் அவர்கள், "பௌதீகரீதியான சிருஷ்டிப்பின் நினைவுகூருதலுக்கு யூதர்கள் ஏழாம் நாளை ஆசரித்தனர் (யாத்திராகமம் 20:8-11); 'புது சிருஷ்டி' (கலாத்தியர் 6:15) என்பதைச் சாத்தியமாக்கிய கிறிஸ்துவின் மரணம், அடக்கம், மற்றும் உயிர்த்தெழுதலின் நினைவாக (1 கொரிந்தியர் 11:23-25) கிறிஸ்தவர்கள் வாரத்தின் முதல்நாளைக் கடைப் பிடிக்கின்றனர்"[2] என்கிறார்.

## ஒரு நினைவுகூருதல்

லூக்கா சுவிசேஷ விவரத்தில், இயேசு தம்மை நினைவுகூரும் விருந்தை ஏற்படுத்தியபோது, அவர் தம் சீஷர்களிடத்தில், "என்னை நினைவு கூரும்படி இதைச் செய்யுங்கள்" என்று கூறினார் (லூக்கா 22:19ஆ). "அவர் உண்மையில் நாம் நினைவுகூரும்படி விரும்பியதுதான் என்ன?" என்று கேட்பது இடர்பாடுள்ளதா? இல்லை என்று நான் நினைக்கிறேன்! "நாம் அவரை நினைவுகூர வேண்டும் என்று அவர் விரும்புகிறார்" என்று கூறுவது மிகப்பொதுவானதாக உள்ளது. ஒவ்வொரு வாரமும் நாம் அவருடன் அவரது மேஜையைச் சுற்றி ஒன்றுகூடுகையில் அவரைப்பற்றி எதை நாம் நினைவுகூரவேண்டும் என்று அவர் விரும்புகிறார்? உண்மை யான கிறிஸ்தவர், சிலுவையைப் பற்றிச் சிந்திக்கும்போது, அவரது சிந்தையில் நேர்மாறான சிந்தனைகள் மற்றும் உணர்வுகளின் கலவை பெருக்கெடுக்கிறது. அவர் வருத்தத்தையும் சந்தோஷத்தையும் ஒருசேர அனுபவிக்கிறார். சிலுவையில் இயேசுவின் தியாக பலியை ஒருவர் சிந்தித்துப் பார்க்கும்போது கண்ணீர் பெருக்கெடுக்கலாம். அந்தக் கண்ணீரானது வருத்தத்தினாலும் சந்தோஷத்தினாலும் தூண்டப்பட்டதாக இருக்கலாம். நமது மீட்புக்காக அப்படிப்பட்ட கிரயம் செலுத்தப்பட வேண்டியிருந்தது பற்றிக் கிறிஸ்தவர்கள் ஆழ்ந்த பரிவிரக்கத்தை உணர வலுவான காரணத்தைக் கொண்டுள்ளனர்; இருப்பினும், அந்தக் கிரயத்தைச் செலுத்த இயேசு மனவிருப்பம் கொண்டிருந்தது பற்றி நாம் சந்தோஷம் அடைவதற்கும் வலுவான காரணம் உள்ளது. இவ்விரு உணர்வுகளும் ஏற்புடையவைகளாகவே இருக்கின்றன. "கர்த்தர் வரு மளவும் அவருடைய மரணத்தை அறிவிக்க" (1 கொரிந்தியர் 11:26ஆ) நாம் ஒன்றுகூடுகையில் உலர்ந்த கண்களுடனோ அல்லது உணர்வுகளில் சிறிதளவே மாற்றத்துடனோ ஒவ்வொரு வாரமும் கர்த்தருடைய பந்திமேஜையைச் சுற்றி ஒன்றுகூடுதல் என்பது ஏற்புடையதல்ல.

இயேசு நமக்காக ஏற்கனவே சிலுவையில் நிறைவேற்றியுள்ளதை மாத்திர மல்ல, ஆனால் அவர் நமது இராஜாவாக, பிரதான ஆசாரியராக,

மற்றும் மத்தியஸ்தராக (எபிரெயர் 4:15; 1 தீமோத்தேயு 2:5, 6) இப்போது நமக்குச் செய்துகொண்டிருப்பவற்றையும், நாம் நினைவுகூர வேண்டும் என்று விரும்புகிறார் என்பது தெளிவு. அவர் தமது சொந்த உயிர்த்தெழுதலினால் உறுதிப்படுத்தியுள்ளதான, எதிர்காலத்தில் நமக்கு வாக்களித்துள்ளவற்றையும் நாம் நினைவுகூர வேண்டும் என்று விரும்புகிறார்: "நாம் அவரோடேகூடப் மரித்தோமானால், அவரோடேகூடப் பிழைத்துமிருப்போம்; அவரோடேகூடப் பாடுகளைச் சகித்தோமானால் அவரோடேகூட ஆளுகையும் செய்வோம்; ..." (2 தீமோத்தேயு 2:11ஆ, 12).

கர்த்தருடைய பந்தி மேஜையை நாம் அணுகுகையில், துயரும் சிந்தித்துப்பார்க்கும் உணர்வும் ஏற்புடையதாக இருக்கையில், விருந்தானது ஒரு கொண்டாட்டத்தையும் மறைமுகமாய் உணர்த்துகிறது. என் தந்தை இறந்தபின்பு, எங்கள் குடும்பம் விடுமுறைக்காக அல்லது மறு ஒன்றிப்பிற்காக ஒன்றுகூடும்போது, அவர் எங்களுடன் இல்லை என்ற வேதனைநிறைந்த உணர்வை நாங்கள் எப்போதும் கொண்டிருந்தோம். குறிப்பாக எனது தாயார், அவர் இருந்தபோது வாழ்வு எவ்வாறு இருந்தது என்பதை நினைவுகூருகையில், கவலையான தருணத்தைக் கொண்டிருப்பார். எனது தாயார் சில வேளைகளில், "உங்கள் அப்பா இதை மகிழ்வுடன் அனுபவித்திருப்பார்" என்று கூறுவதுண்டு. அதேவேளையில், அவர் [எனது தாயார்] தமது பிள்ளைகளுடன் இன்னும் இருந்து அவரது [எனது தந்தையின்] பிரசன்னத்தை உணரக்கூடியவராக இருத்தல் குறித்து மகிழ்ச்சியாக இருப்பார். ஒரு கருத்தில், அவர் எங்கள் ஒவ்வொருவரின் பாகமாக இருப்பதால் எங்களுடன் இருந்தார். மூன்று பிள்ளைகள் அவரைப்போல் இருக்கின்றனர், மற்றும் எனது தாயார் தமது இருதயத்தில் அவரது நினைவை இன்னமும் கொண்டிருக்கிறார்.

அவ்வாறே, இயேசுவை நினைவுகூரும்படி நாம் கூடிவரும்போது, நம்மை விடுவிப்பதற்கு நமது பாவக்கடனை அவர் செலுத்தித் தீர்த்த இடமான சிலுவைதான் மையமாக உள்ளது. அப்பமும் திராட்சரசமும் பலியாகச் செலுத்தப்பட்ட அவரது உடலையும் இரத்தத்தையும் நமக்கு நினைவூட்டுகின்றன. அவர் நமது பலி ஆட்டுக்குட்டியாக இருக்கிறார். அவர் அப்பத்திற்காகவும் திராட்சரசத்திற்காகவும் நன்றிசெலுத்தியதைப்போல, நாம் நன்றி செலுத்துதலில் ஒன்றுகூடுகிறோம். நாம் நமது விடுதலையைக் கொண்டாடுகிறோம். நாம் அவருடனும் ஒருவர் பிறருடனும் இவ்விருந்தை உண்ணுகையில், ஒரே சரீரத்தின் உறுப்புகள் என்ற வகையில், நாம் நமது ஒருமைப்பாட்டையும் ஒருவர் மற்றவரைத் தாங்குவதையும் மறு உறுதிப்படுத்துகிறோம். நம் மத்தியில் அவரது பிரசன்னத்தை நாம் உணருகிறோம் மற்றும் அவர் நம்மை மரித்தோரில் இருந்து உயிர்ப்பித்து அல்லது நமது பௌதீக உடல்களைப் புதிய ஆவிக்குரிய உடல்களாக மாற்றி நித்தியத்திற்கும் அவரோடேகூட இருக்க நம்மை எடுத்துச்செல்லும் வேளைக்காகப் பெருவிருப்பம் கொண்டுள்ளோம். நாம் மரிப்பதற்கு முன்பு அவர் வருகிறாரா அல்லது அவர் வருவதற்கு முன்பு நாம் மரிக்கிறோமா என்பது ஒரு பொருட்டல்ல என்று அறிவதிலிருந்து சந்தோஷம் வருகிறது. நாம் முதலில் மரித்தால், அவர் நம்மை உயிர்ப்பிப்பார் (யோவான் 5:28,

29; 1 தெசலோனிக்கேயர் 4:16). அவர் முதலில் வந்தால், அவர் நம்மை மாற்றுவார் (1 கொரிந்தியர் 15:52-57).

## பயபக்தியுடன் கூடிய ஒரு கொண்டாட்டம்

கொண்டாடுவதற்குக் கிறிஸ்தவர்கள் அதிகமானவற்றைக் கொண்டுள்ளனர். நமது மத்தியில் கிறிஸ்து இருக்க ஒரே சரீரமாக, நாம் ஒன்றித்திருப்பதைக் கொண்டாடுகிறோம். நமது குடும்பத்தை நாம் கொண்டாடுகிறோம். நமது வெற்றியை - சிலுவையில் பாவத்தின் மீதான பகிர்ந்து கொள்ளப்பட்ட வெற்றியை மட்டுமல்ல, ஆனால் ஒவ்வொரு நாளும் அவருடன் நாம் நடக்கையில் நமது தனிப்பட்ட வெற்றிகளையும் - நாம் கொண்டாடுகிறோம். மரணத்தில் இருந்து நாம் விடுதலை பெற்றதாக உள்ள உயிர்த்தெழுதலின், நமது நம்பிக்கையை நாம் கொண்டாடுகிறோம். அவர் மறுபடி வருவார் என்ற வாக்குத்தத்தத்தை நாம் கொண்டாடுகிறோம். கர்த்தருடைய இராப்போஜனத்தில் பங்கேற்பதினால் சிலுவைக்குத் திரும்புதல் என்பது சவ அடக்க இரங்கற்பாடலாக இருப்பதில்லை. இயேசு ஒருக்காலும் அதை விரும்பி நோக்கங்கொண்டதில்லை. அவருடைய இராப்போஜனம் என்பது நாம் அடிக்கடி திரும்பி வரும் வேளை மற்றும் இடமாகவும் நமது மீட்பின் ஆதாரமூலத்தை நமக்கு நினைவூட்டுவதாகவும் இருக்க வேண்டும் என்று அவர் அர்த்தப்படுத்தினுர். அவரது மரணம் ஏன் அவசியமாயிருந்தது என்று மட்டும் அல்ல, ஆனால் பாவத்திற்கு நாம் மரித்தல் ஏன் அவசியமாயிருக்கிறது என்பதையும் நாம் நினைவுகூர வேண்டும் என்று அவர் விரும்புகிறார். பாவத்திற்கு நாம் மரித்தல் என்பது சிலுவையில் நடைபெற்றது என்பதை நினைவுகூருதல், அவரது மரணம் அங்கே நடைபெற்றதை நாம் நினைவுகூருதலைப்போலவே முக்கியமானதாக உள்ளது. ‘‘நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலே நமக்கு ஜெயங்கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம்’’ (1 கொரிந்தியர் 15:57).

கொண்டாடுங்கள் - ஆனால் நாம் பாவம் நிறைந்தவர்களாகவும் பலவீனர்களாகவும் இருக்கையில், தேவன் பரிசுத்தராகவும் தூய்மையானவராகவும் இருக்கிறார் என்பதை உணர்ந்தறியுங்கள். அவர் நம்மைப் போன்றவரல்ல, ஆனால் நாம் அவரைப் போன்றிருக்க வேண்டும் என்று அவர் விரும்புகிறார். கர்த்தருடைய இராப்போஜனம், பயபக்தியையும், சந்தோஷத்தையும் நடைமுறைப்படுத்த முழுமையான அமைவை நமக்கு அளிக்கிறது. நினைவுகூரும் விருந்து, சிலுவையில் நமக்குப் பதிலாக அவர் மரித்ததில் நம்மைப் பங்கேற்க அனுமதிக்கும் அடையாளம் என்ற வகையிலும் அதேவேளையில் சிலுவைக்கும் வெற்றுக் கல்லறைக்கும் இடையில் அவர் நமக்காக ஆதாயப்படுத்திய வெற்றியைக் கொண்டாடுதல் என்ற வகையிலும் நாம் அதை [நினைவுகூரும் விருந்தை] அணுக வேண்டும். இவ்வாறு பந்திமேஜையானது ஆராதனையின் கவனக்குவிப்பிடமாக - வாரத்தின் முதல்நாளில் நமது பாடல்கள், ஜெபங்கள், மற்றும் வேதவசனத் தியானங்கள் நம்மை நடத்திச் செல்லும் இடமாக உள்ளது. அங்கே, நான் இயேசு எனக்காக அப்படிப்பட்ட விலையைச் செலுத்த முடிந்தது பற்றி

ஆச்சரியத்துடனும், பயபக்தியுடனும், மற்றும் பெரும் வியப்புடனும் நினைவுகூரும் அதேவேளையில் அவர் அதைச் செய்தார் என்ற உண்மையைக் கொண்டாடவும் முடியும். நான் கர்த்தருடைய பந்தி மேஜையை அணுகும் ஒவ்வொரு வேளையிலும், நான் இருக்கும் நிலையினிமித்தம் சிலுவையில் இயேசு செய்ய வேண்டியிருந்ததை - மற்றும் அவரது உயர்நிலையினிமித்தம் அவர் மாத்திரமே அதைச் செய்ய முடியும் என்பதை - உணர்ந்தறிய அழைக்கப்படுகிறேன். சில வேளைகளில் எனது கண்களை நிறைக்கும் கண்ணீரானது சந்தோஷம் மற்றும் வருத்தம் ஆகியவற்றின் கலவையாக உள்ளது. நான் பிதாவினிடத்தில் அணுகும்படி அனுமதிக்கப்பட்டுள்ளது மட்டுமின்றி, அதைச் செய்ய அழைக்கப்பட்டும் இருக்கிறேன் என்பது பற்றி நான் வியப்படைகிறேன். அதற்காக நான், "அவரது நாமத்தைப் பாராட்டி பெருமைப்படுத்த" மாத்திரமே முடியும். கர்த்தருடைய பந்தி மேஜையில் பங்கேற்றல் என்பது ஒரு கொண் டாட்ட மாக உள்ளது, ஆனால் அது அவரது மேன்மைக்குப் பயபக்தியுடன் வணங்கும் வேளையாகவும் உள்ளது. "ஏனென்றால் இது தேவனுடைய பண்பைச் சிறப்பித்துக் கூறுவதாகவும் தேவன் நமது ஆராதனைக்குப் பாத்திரராக இருப்பதற்கான காரணத்தை விளக்குவதாகவும் உள்ளது."[3]

## முடிவுரை

கர்த்தருடைய இராப்போஜனத்தின் வல்லமை என்பது மாயவித்தை யான பொருட்களில் அல்ல, ஆனால் நினைவுகூருதலிலேயே உள்ளது. இராப்போஜனம் என்பது கிறிஸ்துவின் சிலுவைமீது நமது கவனத்தை மையப்படுத்தும் இரு கிறிஸ்தவ அடையாளங்களில் ஒன்றாக உள்ளது. இன்னொன்று கிறிஸ்துவுடன் நமது மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல் ஆகியவற்றை அடையாளப்படுத்தும் ஞானஸ்நானம் - தண்ணீருக்குள் முழுக்காட்டப்படுதல் - என்பதாகும். இந்த அடையாளங்கள் ஏற்கனவே நடந்துள்ள நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்கும் வழிமுறையை அளிக்கின்றன. நினைவுகூருதலின் பங்கேற்றல் என்பது அந்த நிகழ்ச்சியை ஜீவனுள்ளதாகக் காத்துக்கொள்ளுகிறது மற்றும் அதை நமது சொந்த அனுபவத்தில் செயல்படுத்த அனுமதிக்கிறது. ஞானஸ்நானம் என்பது கிறிஸ்துவுடன் மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல் ஆகியவற்றில் ஒருவேளை-மாத்திரம் பங்கேற்கும் நிகழ்ச்சியாக உள்ளது. கர்த்தருடைய பந்திமேஜையில், நாம் ஒவ்வொரு வாரமும் அவரது மரணம் அடக்கம், உயிர்த்தெழுதலில் பங்கேற்க முடியும். அந்த நிகழ்ச்சியை ஜீவனுள்ளதாகக் காத்துக்கொண்டு நமது இருதயங்களில் [அதைப்பற்றி] செயல்துடிப்புடன் இருத்தல் என்பது மிகவும் முக்கியமானதாக உள்ளது. ஒரு குடும்பம் என்ற வகையில் ஒன்றுகூடுதலில் இருந்து நாம் பெலம் தரவழைக்கிறோம், மேலும் இயேசுவின் பலி மற்றும் வெற்றியினால் நாம் காலந்தோறும் அவருடன் திரும்பவும் வாழ்கிறோம்.

குடும்ப ஐக்கியம் என்பது - பௌதீக குடும்ப ஐக்கியம் என்பதும்கூட விசேஷித்ததாக உள்ளது. சபை என்பது ஒருவர் பிறருடனும் தேவனுடனும் கொண்டுள்ள உடன்படிக்கையினிமித்தம் ஒரு குடும்பமாக உள்ளது.

இயேசு தமது இரத்தம் பற்றி "உடன்படிக்கையின் இரத்தம்" என்று உரைத்தார் (மத்தேயு 26:28). இந்த விசேஷித்த உடன்படிக்கை உணவைப் பகிர்ந்துகொள்ளுதல் என்பது மிகவும் அடிக்கடி செய்யப்பட முடியாது, அல்லது அதை அவசரமாகச் செய்து முடிக்கும் விருப்பம் எதையும் நாம் கொண்டிருக்கவும் கூடாது. இது நம்மை ஒன்றாகப் பிணைக்கிற மற்றும் நம்மை ஒரே சரீரமாகப் பற்றிக்கொண்டிருக்கிற நிகழ்ச்சியாக உள்ளது. கர்த்தருடைய இராப்போஜனம் என்பது நிகழ்த்தப்பட வேண்டிய சடங்காச்சாரமல்ல, ஆனால் அது நம்மை ஒன்றுகூட்டுகிற விருந்தாகவும் தேவனுடனும் பிறருடனும் நாம் ஐக்கியம் கொள்ள உதவும் விஷயமாகவும் உள்ளது.

ஆகவே, கர்த்தருடைய இராப்போஜனம் என்பது நமது வாராந்திர ஆராதனைக் கூடுகையில் ஜெபம் மற்றும் துதி ஆகியவற்றைப் போன்றதொரு பாகமாக இருத்தல் வேண்டும். கிறிஸ்துவின் மரணம் என்ற விஷயமே நமது ஆராதனையின் மையப்பகுதியாக நிலைத்திருக்க வேண்டும். தேவன் கர்த்தருடைய இராப்போஜனத்தை ஒவ்வொரு வாரமும் சிலுவையை நோக்கி, நம்மை இழுக்கும் வகையில் வடிவமைத்திருக்கிறார், அங்கேதான் நமது மீட்பு நடைபெற்றது, அங்கேதான் நமது வெற்றி முத்திரையிடப்பட்டது.

---

குறிப்புகள்

[1]Jimmy Jividen, *More Than a Feeling: Worship That Pleases God* (Nashville: Gospel Advocate Co., 1999), 105. [2]David Roper, "A Family Portrait," *Truth for Today, Acts 8 (April 1996):38*. [3]Robert E. Webber, *Worship Is a Verb: Eight Principles for Transforming Worship* (Peabody, Mass.: Hendrickson Publishers, 1999), 16.